பின்வரும் செயற்பத்திரத்தின் எல்லா வினாக்களுக்குமான விடைகளை ஆசிரியரின் வழிகாட்டலின்படி பயிற்சிக்கொப்பிகளில் எழுதுங்கள். அல்லது ஒப்படையாக தயாரியுங்கள். விடையளிக்கும்போது உங்களது **தமிழ் மொழியும் இலக்கிய நயமும்** பாடநூலை பயன்படுத்துங்கள்.

பகுதி 1

1. பொருள் தருக

1. பேராசை …….. பக்கம்(08)
2. மத்து …….. பக்கம்(22)
3. கூற்றுவன் …….. பக்கம்(22)
4. எச்சம் …….. பக்கம்(26)
5. சப்தம் …….. பக்கம்(31)
6. கொட்டுதல் …….. பக்கம்(31)
7. தேர் …….. பக்கம்(41)
8. விழைகிறேன் …….. பக்கம்(41)
9. வெள்ளடுப்பு …….. பக்கம்(52)
10. ஆத்திகன் …….. பக்கம்(52)

(10புள்ளிகள்)

2. தொடர்பு படுத்துக

அ	ஆ
1. வெள்ளம்	ஒப்பனை
2. சண்டை	நீர்ப்பெருக்கு
3. குடம்	கடிதம்
4. தேசம்	போர்
5. அலங்காரம்	நாடு
6. மடல்	தவளை

பக்கம் (57,58) (10புள்ளிகள்)

3. பின்வரும் சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சொல் வேறுபட்டது அச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. போர், யுத்தம், சரம், சண்டை, அமர் ……
2. அந்திப்பொழுது, மாலை, வைகறை, சாயங்காலம் ……
3. மன்னன், வேந்தன், அரசன், கவிஞன் ……
4. பூ, மலர், புஷ்பம், படம் ……
5. காடு, தீ, கானகம், ஆரணியம் ……

www.lkedu.lk

6. இன்னல், இடர், சந்தோசம், இடும்பை .....
7. கோபம், மூர்க்கம், சினம், அமைதி .....
8. ஆரம்பம், முடிவு, தொடக்கம், ஆதி .....
9. காற்று, அனல், நெருப்பு, தீ .....
10. நித்திரை, துயில், உறக்கம், விழிப்பு .....

(20புள்ளிகள்)

4. தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க

ஆண்பால்	பெண்பால்	பலர்பால்	ஒன்றன்பால்	பலவின்பால்
பாடினான்			பாடியது	பாடின
குடித்தான்		குடித்தார்கள்		குடித்தன
எழுதினான்			எழுதியது	
ஓடினான்	ஓடினாள்			ஓடின
நின்றான்		நின்றார்கள்		
விழுந்தான்				
உண்டான்				உண்டன
	பாய்ந்தாள்			பாய்ந்தன

பக்கம் (43-47) (20புள்ளிகள்)

5. பின்வரும் வாக்கியங்களில் எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன அவற்றைத் திருத்தி மீண்டும் எழுதுக?

1. அக்கா அளகான கவிதை எழுதினாள்
   .....
2. ஆசிரியர்கள் வகுப்பரைக்குச் சென்றனர்
   .....
3. ஏமாந்த நாய் தழை குனிந்தபடி ஓடியது
   .....
4. பயற்காற்று "ஊள..ஊள.." என இறைந்தது
   .....
5. இன்று காற்றுடன் கூடிய மலை பெய்தது
   .....

(10 புள்ளிகள்)

6. சுருக்கமான விடை தருக.

1. குரங்கின் சேட்டைக்கு கிடைத்த பரிசு யாது? பக்(30)
2. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை யாது? பக்(27)
3. திணையை எத்தனை வகையாக பிரிக்கலாம்? அவை எவை? பக்(43)
4. பின்வருவனவற்றுக்கு ஒத்தக்கருத்துச் சொல் தருக?
   1. காடு 2.திசை 3.விசாலம் பக்(32)
5. தந்தை மகனுக்கு எழுதிய கடிதத்தில் கூறப்படும் முதுமொழி யாது? பக்(45)

(10புள்ளிகள்)

www.lkedu.lk

7. பின்வரும் சொற்களை வைத்து எழுத்துப்பிழைகளின்றி வாக்கியம் அமைக்குக



1.இலை .....



2.விலை .....



3.விளை .....



4.மலை : .....



5.மழை .....



6.பனி : .....



7.பணி :.....

8. ஆல் .....

9. வலி .....

10.வழி .....

(10புள்ளிகள்)

www.lkedu.lk

8. பின்வரும் பகுதியை படித்த பின் உமது மனதில் தோன்றும் எண்ணங்களை ஒரு கதையாக எழுதுங்கள். அல்லது தரப்பட்டுள்ள படத்தை பார்த்து கவிதை ஒன்றை அல்லது பந்தியொன்றை எழுதுங்கள்.

நாளாந்த கடமைகளை முடித்தபின் வழமைபோல் படுக்கைக்கு போனான் பிரணவன். காலையில் பாடசாலைக்கு செல்வதும் வந்த பின்னர் தனது தாயாருக்கு உதவியாக தையல் தொழிலில் உதவி செய்வதும் அவனுடைய வழக்கம். பின்னர் வீட்டுப்பாடங்களை செய்வது , அயல் வீட்டு தோழர்களுடன் விளையாடுவது என்று பொழுதுபோகும். அன்று படுத்தவுடன் களைப்பின் மிகுதியால் அவனுக்கு உறக்கம் கண்களைச்சுழற்றியது....



www.nie.lk